## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (ஜூன் 2019)

### PSS 4133 இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை
### Foreign Policy of Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி-I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும், பகுதி-II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.

---

### பகுதி – I

01. (அ) மாற்றமடையும் சர்வதேச சூழலுக்கு ஏற்ப வெளியுறவுக் கொள்கையின் உள்ளடக்கங்கள் எவ்வாறு தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் வகிபாகம் யாது?

(10 புள்ளிகள்)

02. (அ) சந்திரிக்கா குமாரதுங்க பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்ட வெளியுறவுக் கொள்கையின் சிறப்புக்களைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) உள்நாட்டு யுத்தத்தின் வெற்றிக்கும், அதன் பின்னரான சர்வதேச அழுத்தத்தினையும் வெற்றி கொள்ளவும் மகிந்த இராஜபக்ஷ (2005-2015) வகுத்து செயற்படுத்திய வெளியுறவுக் கொள்கை தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) இலங்கை-இந்திய உறவில் செல்வாக்குச் செலுத்தும் கச்சதீவு மற்றும் மீனவர்கள் விவகாரம்

(10 புள்ளிகள்)

(ஆ) சீன முதலீட்டிலான கொழும்பு சர்வதேச நிதி நகரமும், உலக வல்லரசுகளின் அது நோக்கிய கவனமும்

(10 புள்ளிகள்)

(இ) இலங்கையில் 21/4 ஐ.எஸ் தீவிரவாத தாக்குதலும் அதற்குப் பின்னரான இலங்கை மீதான சர்வதேச நாடுகளின் கவனமும்.

(10 புள்ளிகள்)

## பகுதி – II

04. "இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் அமைவிடத்தினா வல்லரசுகளின் அதிகாரப் போராட்ட விளையாட்டு மைதானமாக இலங்கை மாறியது." இக்கூற்றினைப் பகுப்பாய்வு செய்க?

(20 புள்ளிகள்

05. "இருபத்தோராம் நூற்றாண்டு கடல்சார் பட்டு வீதித் திட்டத்தை சீனா முன்னோக்கிக் கொண்டு செல்ல இலங்கையின் நட்பு ஏன் அவசியமாகும்." என்பதை மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

06. 1983-1990 ஆம் ஆண்டிற்கும் இடையிலான காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வெளியுறவுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்திய காரணிகளை இனம் கண்டு பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்

07. வுரலாற்றுக் காலம் தொடக்கம் இன்றுவரை இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான வெளியுறவுக் கொள்கையில் காணப்படும் முக்கிய பண்புகளை இனம் கண்டு பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்

*****